வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 10.01.2026 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் வளர்ச்சியில், இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- 3 நாள் பயணமாக இன்று குஜராத் செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, சோம்நாத் ஆலயத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.
- பரிக்க்ஷா பே சர்ச்சா 2026-ல் பங்கேற்க இதுவரை, 4 கோடிக்கும் அதிகமானோர் ஆன்-லைனில் பதிவு செய்துள்ளனர்.
- நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 28ஆம் தேதி தொடங்குகிறது.

--------------------------------

<u>பிரதமர் 1 (19)</u>

நாட்டின் வளர்ச்சியில், இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாக, பிரதமர் திரு.நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சமூக வளைதலத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று, புதுடெல்லியில் தொடங்கி உள்ளதை சுட்டிக் காட்டியுள்ளார். இந்த நிகழ்ச்சியில், நாடு முழுவதிலும் இருந்து, இளையோர் பங்கேற்றுள்ளதாகவும், இவர்களோடு, நாளை மறுதினம், தாம் கலந்துரையாட உள்ளதாகவும், பிரதமர் தெரிவித்துள்ளார். முன்னதாக, இந்த நிகழ்ச்சியின் தொடக்க விழாவில் கலந்து கொண்டு பேசிய மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, இளையோரின் திறனை

வெளி கொண்டு வருவதற்கு ஏதுவாக, மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார். இதன் ஒருபகுதியாக, இந்த நிகழ்ச்சி நடைபெறுவதாகவும் அவர் தெரிவித்தார். தொழில்நுட்பம், நிர்வாகம், சமூக மேம்பாடு போன்ற துறைகளில், பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான யோசனைகளை, இளையோர் வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். மேலும், நாட்டின் எதிர்காலத்தை வடிவமைப்பதில் இளைஞர்களின் பங்கு மிகவும் அவசியம் என்றார். 2047ஆம் ஆண்டிற்குள், வளர்ந்த இந்தியாவை உருவாக்க, இளைஞர்களின் திறமை மற்றும் படைப்பாற்றலை காண்பதற்கான ஒரு

<u>பிரதமர் 2 (10)</u>

முக்கியமான நிகழ்வாக இந்நிகழ்ச்சி அமைந்துள்ளது என்றும், தேசத்தை கட்டி எழுப்புவதில், இளைஞர்களை தீவிரமாக ஈடுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் உறுதிபாட்டை இந்த தளம் பிரதிபலிக்கிறது என்றும் கூறினார். தொடர்ந்து இந்நிகழ்ச்சியில் பேசிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல், பிரதமர் திரு. நரேந்திர மோடி, தொலைநோக்குப் பார்வையுடன் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் காரணமாக, வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான இலக்கினை எட்ட இயலும் என்று தெரிவித்தார். எந்தவொரு சவாலையும், துணிச்சலாக எதிர்கொண்டு வெற்றி பெறும் திறன் நமது இளையோர் சக்திக்கு உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

--------------------------------

*<u>பிரதமர் குஜராத் 1 (8)</u>*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 3 நாள் பயணமாக இன்று குஜராத் மாநிலம் செல்கிறார். இந்த பயணத்தின் போது, சோம்நாத் ஆலயத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளில் அவர் பங்கேற்கிறார். தொடர்ந்து, ராஜ்கோட்டில் நடைபெறும் 2ஆவது எழுச்சிமிக்க குஜராத் மண்டல மாநாட்டில் அவர் கலந்து கொள்கிறார். ராஜ்கோட், அகமதாபாத், மற்றும்,

காந்தி நகர் ஆகிய இடங்களில், பொறியியல் தொழில்நுட்பம், பசுமை எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில், வளர்ச்சிப் பணிகளையும் அவர் தொடக்கி வைக்கிறார். இதுகுறித்த கூடுதல் தகவல்கள்…

(வாய்ஸ்)

*பிரதமர் குஜராத் 2 (18)*

(வாய்ஸ்)

சோம்நாத் கோவிலின் நீடித்த உணர்வை கொண்டாடும் 4 நாள் சோம்நாத் ஸ்வாபிமான் பர்வ் நிகழ்ச்சி, கடந்த வியாழன் கிழமை தொடங்கியது. கி.பி. 1026-ல் கஜினி முகமதுவால் சோம்நாத் கோவிலின் மீது முதல் தாக்குதல நடந்து ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்ததை இந்த நிகழ்ச்சி குறிக்கிறது. 1951ஆம் ஆண்டில், மறுசீரமைக்கப்பட்ட கோவில் திறக்கப்பட்டதன் 75ஆவது நிறைவுடன் இந்த ஆண்டு கொண்டாட்டங்கள் ஒத்து போகின்றன. இன்று மாலை, சோம்நாத் செல்லும் பிரதமர், சோம்நாத் கோவிலில் ஓங்கார் மந்திர பாடல் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். கோவிலின் ட்ரோன் காட்சியையும் அவர் பார்வையிடுகிறார். சோம்நாத் கோவிலை பாதுகாக்க, பல நூற்றாண்டுகளாக தங்கள் இன்னுயிரை ஈந்த எண்ணற்ற வீரர்களை கவுரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள சௌரிய யாத்திரையில் பிரதமர் நாளை பங்கேற்கிறார். தொடர்ந்து, அங்கு நடைபெறும் பொது நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்து கொள்கிறார். சுதந்திரத்திற்கு பிறகு, கோவிலை புணரமைக்கும் முயற்சியை சர்தார் வல்லபாய் பட்டேல் மேற்கொண்டார். இந்த மறுமலர்ச்சிப் பயணத்தில், மிக முக்கியமான மைல் கல்லில் ஒன்று 1951ஆம் ஆண்டில், அப்போதைய குடியரசுத் தலைவர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் முன்னிலையில், புதுப்பிக்கப்பட்ட சோம்நாத் கோவில் முறைப்படி பக்தர்களுக்காக திறக்கப்பட்டது.

--------------------------------

*பரிக்ஷா பே சர்ச்சா* (15)

கடந்த ஆண்டு 3 கோடியே 50 லட்சத்திற்கு அதிகமான பதிவுகளுடன் படைக்கப்பட்ட கின்னஸ் சாதனையை, பரிக்ஷா பே சர்ச்சா 2026, முறியடித்துள்ளது. இதுவரை, 4 கோடிக்கும் அதிகமானோர் ஆன்-லைனில் பதிவு செய்துள்ளனர். இதுகுறித்து, மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவில், பரிக்ஷா பே சர்ச்சா, மாணவர்களுக்கு, மன அழுத்தம் இல்லாத சூழலை உருவாக்கும் நோக்கில் நாடு தழுவிய இயக்கமாக, உருவெடுத்துள்ளது என்று, குறிப்பிட்டுள்ளார். பரிக்ஷா பே சர்ச் 2026-ல், அனைத்து தேர்வு வீரர்களும் தீவிரமாக பங்கேற்க வேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்துள்ளார். தேர்வு காலம் நெருங்கி வருவதால், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நம்பிக்கை, ஊக்கம், மற்றும், நல்வாழ்வு குறித்த வழிகாட்டுதல்கள், மாணவர்களின் தேர்வு தொடர்பான மன அழுத்தத்தை குறைப்பதாக அவர் மேலும் பதிவிட்டுள்ளார். இந்த முன் முயற்சியானது, மாணவர்கள், பெற்றோர்கள், மற்றும், ஆசிரியர்களை பிரதமருடன் நேரடியாக உரையாட ஒன்றிணைக்கும் ஒரு தளமாக மாறி உள்ளது.

-------------------------------

*அமித் ஷா (8)*

உலகளாவிய ஆற்றல் மையமாக, நம் தேசம் உருவெடுக்க தற்சார்பு நிலை மிகவும் தேவை என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார். ராஜஸ்தான் மாநிலம் ஜோத்ப்பூரில், இன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய அவர், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களால் இந்நிலை சாத்தியமாவதாக எடுத்துரைத்தார். தாய் மொழியை முன்னெடுத்து செல்வதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், பிற மொழிகளை கற்று அறிந்தாலும், தாய் மொழி பேணி பாதுகாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

-------------------------------

*பிரகதி- பஞ்சாப் 1 (11)*

முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களின் அமலாக்கத்தில், மத்திய-மாநில அரசுகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மூலம் குறைகளை உடனுக்குடன் களைந்து, திட்டங்கள், குறித்த நேரத்தில் நிறைவேற்றி முடிக்கப்படுவதை உறுதிப்படுத்த, பிரதமர் திரு நரேந்திர மோடியின் எண்ணத்தில் உருவாகி வடிவமைக்கப்பட்ட, பிரகதி தொழில் நுட்ப வசதி, இதுவரை, 50 கூட்டங்களை வெற்றிகரமாக நடத்தி, புதிய மைல்கல் ஒன்றை எட்டி உள்ளது. பிரதமரின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயல்படும் பிரகதி வசதி மூலம் கண்காணித்து நிறைவேற்றப்பட்ட பஞ்சாப்பில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் Phagwara Rup Nagar பிரிவை 4 வழிச் சாலையாக மாற்றும் திட்டம் குறித்து, இன்று இந்த சிறப்புத் தொகுப்பில் காண்போம்…..

(வாய்ஸ்)

பிரகதி- பஞ்சாப் 2 (19)

பஞ்சாப்பில் உள்ள தேசிய நெடுஞ்சாலையின் Phagwara - Rup Nagar பிரிவை, 4 வழிச் சாலையாக மாற்றும் திட்டம், ஜலந்தர் மற்றும் Phagwara -வின் தொழில்துறை மையங்களை இணைக்கும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வழித்தடம் ஆகும். சுமார், 88 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த திட்டம், 2 ஆயிரத்து 574 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில், செயல்படுத்தப்பட்டு, அமிர்தசரஸ் மற்றும் சண்டிகருக்கு இடையே மிக குறுகிய பாதையை ஏற்படுத்தி உள்ளது. இது, இந்த வழித்தடத்தில் உள்ள முக்கிய சீக்கிய யாத்திரை மையங்களுக்கான அணுகலை வலுப்படுத்தி உள்ளது. இத்திட்டம், நிலம் கையகப்படுத்துதல், மற்றும் இழப்பீடு வழங்குதல் தொடர்பான, குறிப்பிடத்தக்க செயலாக்க சவால்களை எதிர்கொண்டது. 2018ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற, பிரகதி மறு ஆய்வுக் கூட்டத்தின் போது, பிரதமர் திரு. நரேந்திர மோடி முக்கிய தடைகளை சமாளிக்க வழிமுறைகளை வழங்கினார். இந்த திட்டம், 2021ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 26ஆம் தேதி

வெற்றிகரமாக தொடங்கப்பட்டது. இது பஞ்சாப்பின் பொருளாதாரம்ட மற்றும், போக்குவரத்து முன்னேற்றத்திற்கு ஒரு முக்கிய அங்கமாக மாறி உள்ளது. பிரகதி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கடுமையான கண்காணிப்பு, உறுதியான தலைமைத்துவம், மற்றும், கூட்டுறவு கூட்டாட்சி ஆகியவை, நீடித்த நிலம் கையகப்படுத்தும் சவால்களை

*பிரகதி- பஞ்சாப்* 3 (4)

எவ்வாறு முழுமையாக செயல்படுத்த, உள்கட்டமைப்பிற்கு ஒரு சிறந்த உதாரணமாக திகழ்கிறது. இந்த வழித்தடம், பயண நேரத்தை குறைக்கவும், வாகன இயக்க செலவுகளை குறைக்கவும், பயணிகள் மற்றும் கனரக வர்த்தக வாகனங்கள் ஆகிய இரண்டிற்கும் பாதுகாப்பை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டது.

--------------------------------

நாடாளுமன்றம் (10)

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 28ஆம் தேதி தொடங்குகிறது. ஆண்டின் முதல் கூட்டத் தொடர் என்பதால், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றுகிறார். 29ஆம் தேதி, பொருளாதார ஆய்வறிக்கை சமர்பிக்கப் படுகிறது. 2 கட்டங்களாக நடைபெறும் பட்ஜெட் கூட்டத் தொடரின் முதல் கூட்டம் அடுத்த மாதம் 13ஆம் தேதி நிறைவடையும். மீண்டும், மார்ச் 9ஆம் தேதி கூடும் நாடாளுமன்றம், ஏப்ரல் 2 ஆம் தேதி வரை நடைபெறும், பட்ஜெட் கூட்டத் தொடரில் மக்கள் நலன் சார்ந்த, ஆக்கப் பூர்வமான விவாதங்கள் இடம்பெறும் என்று, நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

--------------------------------

ஹர்தீப் சிங் புரி (19)

நாடு முழுவதும் தனிநபர் கழிப்பறைகள் பெண் குழந்தைகளின் மாண்பிற்கு உத்வேகம் ஏற்படுத்தி உள்ளதாக, மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி தெரிவித்துள்ளார். கோவையில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், 2014ஆம் ஆண்டு, 14 கோடியாக இருந்த தனிநபர் கழிப்பறைகளின் எண்ணிக்கை, கடந்த ஜனவரி மாதம் 33 கோடியே 33 லட்சமாக அதிகரித்துள்ளது என்று கூறினார். அதேபோல், நகர்ப்புறங்களில் மட்டுமே இருந்து வந்த சமையல் எரிவாயு வசதி, பிரதமரின் சமையல் எரிவாயு திட்டத்தின் மூலம், ஊரகப் பகுதிகளுக்கும் விரிவுப்படுத்தப்பட்டு, 10 கோடிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் மானிய விலையில் தற்போது பயன் பெறுவதாக, குறிப்பிட்டார். உஜ்வாலா திட்டத்தின் 80 சதவிகித பயனாளிகள், கிராமத்தில் வசிக்கும் மகளிரே என்று, அவர் பெருமிதம் தெரிவித்தார். தமிழகத்தை பொறுத்தவரை, 2014ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், பிரதமரின் சமையல் எரிவாயு திட்ட பயனாளிகளின் எண்ணிக்கை இருமடங்காக தற்போது அதிகரித்து இருப்பதாக, அமைச்சர் கூறினார். வரும் ஆண்டுகளில், சர்வதேச அளவில், எரிசக்தி ஆற்றலை பயன்படுத்தும் முக்கிய நாடாக இந்தியா உருவெடுக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் நம் நாட்டின் மருத்துவ செலவு மிக குறைவாக உள்ளது என்றும், திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.

-------------------------------

ஹிந்தி தினம் (11)

உலக ஹிந்தி தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது. கல்வி, கலாச்சர பரிவர்த்தனைகள், தூதரக நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றில், உலக நாடுகளிடையே ஹிந்தி மொழி பயன்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில், பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்ட உலக நாடுகளின்

770 கல்வி நிறுவனங்கள், ஹிந்தி மொழியை கற்பிப்பது குறிப்பிடத்தக்கது. புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய வெளியுறவுத் துறை இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங், கலாச்சார உறவுகளுக்கான இந்தியக் குழுமம் ஹிந்தி மொழியை, உலக அளவில் கொண்டு செல்ல பணியாற்றி வருவதாக தெரிவித்துள்ளார். உலக அளவில், ஹிந்தி மொழியின் தரம் அதிகரித்து வருவதாக, அவர் மேலும் கூறினார்.

--------------------------------

<u>வானிலை (5)</u>

வங்கக் கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவிழந்ததாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மேலும், தமிழ்நாடு,புதுச்சேரி-காரைக்கால் ஆகிய பகுதகளில் மூடுபனி நிலவும் என்றும், அடுத்த 3 நாட்களுக்கு கனமழை முதல், மிக கனமழை பெய்யும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

--------------------------------